# லிங்கராஜா சிவனாலயம்

## -சாந்திப்பிரியா-



ஒரிசா மானிலத் தலைநகரான புவனேஸ்வரில் பண்டைய காலத்தில் கட்டப்பட்ட பல ஆலயங்கள் உள்ளன. அதில் பல ஆலயங்களின் வரலாறு தெரியவில்லை. ஆனால் அவை கட்டப்பட்ட காலம் மட்டும் தெரிகின்றது. அப்படிப்பட்ட ஆலயங்களில் ஒன்றுதான் லிங்கராஜா எனப்படும்

சிவபெருமான் ஆலயம் ஆகும். புவனேஸ்வரைப் பற்றி பிரும்ம புராணத்தில் அது கோடி லிங்கங்கள் உள்ள பூமி என்றும் ஏகாம்ர ஷேத்திரா என்றும் என பெருமையாக கூறப்பட்டு உள்ளது. ஏகாம்பரா என்றால் மாங்காய் மரம் என்று பொருள். முதலில் லிங்கேஸ்வரர் ஒரு மாமரத்தின் அடியில்தான் இருந்தாராம். பிந்து சாகர் என்ற ஏரியின் அனைத்துப் பக்கங்களிலும் பல ஆலயங்கள் கட்டப்பட்டு உள்ளன. ஆகவே அந்த ஏரிக்கு சமீபம் சென்று விட்டால் வித்தல தேவி, ஆனந்த வாசுதேவா, பரசு ராமேஸ்வரா, ராஜா ராணி மற்றும் லிங்க ராஜா போன்ற ஆலயங்களை தரிசிக்கலாம். ஆலயத்தின் உயரம் சுமார் 54 மீட்டர் என்றும் 25 சதுர அடிக்கும் மேலான அளவில் ஆலயம் கட்டப்பட்டு உள்ளது என்றும் தெரிகின்றது. லிங்க என்பது சிவபெருமானை குறிக்கும். லிங்க ராஜா என்பது லிங்கங்களுக்கு தலைவர் என்பதாகும். ஆகவே லிங்கங்களின் அதிபதியாக உள்ளவரே இங்குள்ள சிவலிங்க உருவிலான சிவபெருமான் எனக் கருதப்பட்டு அவரை த்ரிபுவனேஸ்வரா அதாவது மூன்று லோகங்களின் அதிபதி என்றும் அழைக்கின்றார்கள். இந்த ஆலயத்தின் தேவியின் பெயர் புவனேஸ்வரி என்பதாகும். இங்குள்ள சிவலிங்கம் கிரானைட் கல்லில் செதுக்கப்பட்டு உள்ளது. ஏகாம்பர புராணா எனும் ஸம்ஸ்க்ருத நூலின்படி இங்குள்ள ஆத்ம லிங்கம் சத்ய மற்றும் த்ரேதா யுகங்களில் வெளித்த தெரியாமல் இருந்ததாகவும், அது துவாபர மற்றும் கலி யுகத்தில் மட்டுமே வெளியில் வந்ததாகவும் கூறப்பட்டு உள்ளது.

இந்த ஆலயம் 1100 -1400 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறுகின்றார்கள். இந்த கோவிலை C E. 615 முதல் C E 657 வரை ஆட்சி செய்த லாலத் இந்து கேஷரி என்பவரால் கட்டப்பட்டது என்று சிலரும், சோமவன்ஷி மன்னரான யயாதி என்பவரால்

கி.பி 1025 முதல் 1040 வரையிலான காலகட்டத்தில் ஆலயம் கட்டப்பட்டது என்று பிரும்ம புராணம் கூறினாலும் தற்போதைய ஆராய்ச்சியாளர்களின் கூற்றின்படி இந்த ஆலயம் யாயாதியின் மகன்களான அனந்தா கேசரி மற்றும் உட்யோட கேசரி என்பவர்களால் கட்டப்பட்டதாகவும் நம்பப்படுகின்றது.

அற்புதமான கலைக் களைஞ்சியங்களை உள்ளடக்கி கட்டப்பட்டுள்ள ஆலயத்தினுள் உள்ள சிவ லிங்கம் பூமிக்கு மேல் சுமார் எட்டு அங்குல உயரத்திலும் எட்டு அடி சுற்றுப் பகுதியாகவும் ( அகலம் ) உள்ளது ஒரு அற்புதக் காட்சி ஆகும். இன்னொரு விஷேசம் என்ன எனில் ஆலயத்தில் உள்ள சிவலிங்கத்தை சிவன் எனக் கூறாமல் அது சிவன் மற்றும் விஷ்ணுவை குறிக்கும் ஹரி-ஹரா சிவலிங்கம் என்று கூறுவதானால் இங்கு உள்ள சிவலிங்கத்தை சிவபெருமான் மற்றும் விஷ்ணுவாக ஆராதிக்கின்றார்கள். மேலும் இது ஸ்வயம்பு லிங்கம் என்றும் கூறுகின்றார்கள். ஆலயம் மூன்று பிரிவுகளாக உள்ளது. ஆலயத்தில் நுழைந்ததும் முதலில் கண்ணில் படுவது வினாயகர் சன்னதி, அடுத்து காணப்படுவது நந்தித் கற்தூண். இந்த ஆலயத்தில் ஒரு நாளைக்கு இருபத்தி இரண்டு முறை பூஜைகள் நடை பெறுகின்றன. சிவலிங்க பூஜைக்கு துளசி மற்றும் வில்வ இலைகளே பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆலயத்தின் இன்னொரு விசேஷம் என்ன என்றால் மூலவருக்கு படைக்கப்பட்டு பூஜை செய்த அதே பிரசாதத்தை அங்கிருந்து எடுத்துச் சென்று பார்வதி தேவியின் சன்னதியிலும் வைத்து பூஜிக்கிறார்கள். கணவன் உண்ட அதே உணவை மனைவியும் பகிர்ந்து கொள்வதான ஐதீகம் இது. ஆண்டுக்கு ஒரு முறை லிங்கத்தின் உற்சவ மூர்த்தியை பிந்து சாகர் ஏரியின் நடுவில் உள்ள ஜல

மந்திர் என்ற ஆலயத்திற்கு எடுத்துச் செல்கின்றனர். ஆலய வளாகத்திற்குள் நூற்றி ஐம்பது சிறு சன்னதிகள் உள்ளன. ஆலயத்தை சுற்றி கோட்டைப் போன்று சிவப்புக் கல்லில் சுவர் எழுப்பப்பட்டு உள்ளது.

ஆலயம் எழுந்ததிற்கான வரலாற்று கல் வெட்டுக்கள் இல்லை என்றாலும் இந்த ஆலயத்தின் பின்னணியைக் கூறும் கிராமியக் கதைகளும் உள்ளன. அதில் முக்கியமானது இதுதான். ஒரு முறை தேவலோகத்தில் சிவபெருமானின் உதவியாளர்களாக இருந்த கீர்த்தி மற்றும் வாசா என்ற இரு சிவகணங்கள் பார்வதியின் அழகில் மயங்கி அவளை அடைய விரும்பின. அந்த இரு கணங்களுக்கும் சிவபெருமானிடம் இருந்த பூரணமான பக்தியினால் அவரிடம் இருந்தே தம்மை யாராலும் அழிக்க முடியாத வரங்களை பெற்று இருந்தன. அதன்படி அவர்களுக்கு பூமியில் எவராலும் மரணம் ஏற்படாது. ஆனால் காசியைப் போன்ற புனித நதியைப் போன்ற புனித தீர்த்தத்தில் எந்த பதிவிரதையாவது அவர்களை தன்னுடன் சேர்ந்து நீரில் முழுக அடித்தால் மட்டுமே அவர்கள் மரணம் அடைவார்கள். அதனால் பார்வதியையே சுற்றி சுற்றித் திரிந்த அவர்களை தன்னாலும் ஒன்றும் செய்ய முடியாமல் உள்ளதே என்பதினால் அவர்களை எப்படி அழிப்பது என சிவபெருமான் யோசனை செய்தார். அவர் மனதில் ஒரு திட்டம் தயாராயிற்று. அதன்படி அனைவரும் அமர்ந்து கொண்டு பேசிக் கொண்டு இருக்கையில் வேண்டும் என்றே கீர்த்தி மற்றும் வாசாவும் இருந்த நேரத்தில் பார்வதியிடம் காசியை அடுத்து தனக்கு மிகவும் பிடித்த இடம் பிந்து சாகர் தீர்த்தமே எனக் கூற, அவர் கூறியதின் அர்தத்தை பார்வதி புரிந்து கொண்டாள். உடனே தனக்கு அந்த தீர்தத்தில் சென்று குளிக்க ஆசையாக உள்ளது எனக் கூறினாள். ஆனால் சிவபெருமானோ தன்னால் உடனே அங்கு செல்ல முடியாது

என்பதினால் வேறு எவருடனாவது செல்லும்படிக் கூறினார். அவளை யார் அழைத்துச் செல்வது என்ற கேள்வி எழுந்த பொழுது கீர்த்தி மற்றும் வாசா இருவரும் தாம் அவளை அழைத்துச் செல்வதாகக் கூறினர். ஆகவே பார்வதி அவர்களுடைய தோள்களில் பல்லக்கில் அமருவது போல அமர்ந்து கொள்ள அவளை மிகவும் சந்தோஷமாக தூக்கிக் கொண்டு இருவரும் புவனேசுவரத்தில் இருந்த பிந்து சாகர் தீர்த்தத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு சென்றதும் தனக்கு நதியில் தனியே இறங்கிக் குளிக்க பயமாக இருப்பதாகவும், தன்னை அவர்கள் தோளில் வைத்துக் கொண்டு நீரில் குளிக்க வேண்டும் என்ற பார்வதி தேவி கேட்டுக் கொள்ள, இதுதான் சமயம், அவளை தண்ணீரிலேயே மடக்கிக் கொள்ளலாம் என நினைத்தபடி அவளை தம்முடைய தோள்களில் ஏற்றி வைத்துக் கொண்டு நீரில் இறங்கினர். அந்த மகிழ்சியில் அவர்கள் தமக்கு இருந்த சாபத்தை மறந்து விட்டிருந்தனர். நீரில் இறங்கி அவளை தண்ணீரில் முழுகிக் குளிக்க உதவி செய்ய அவளை தோளில் சுமந்தபடி அவர்களும் நீரில் முழுகத் துவங்கினார்கள் . நீரில் இறங்கிய அவர்களுடைய பலம் குறைந்தது. அதுவே தருமணம் எனக் காத்திருந்த அவர்களுடைய தோளில் அமர்ந்திருந்த பார்வதி அவர்களை தன் காலினால் நீரில் ஆழ்த்தி மரணம் அடையச் செய்தாள். சிவபெருமானுக்கு பிடித்த தீர்த்தம், பார்வதி குளித்த தீர்த்தம் என்பதினால் புனிதம் அடைந்த அந்த புனித தீர்த்தத்தில் அவர்கள் மரணம் அடைந்ததினால் மோட்சத்தை அடைந்தனர். ஆகவே லிங்க ராஜாவான சிவனை பூஜித்த கீர்த்தி மற்றும் வாசாவின் காமத்தை அடக்கி மோட்சம் தந்த ஏரி என்பதினால் அதன் பெயர் லிங்கராஜா ஏரி என ஆயிற்று. அங்கு பார்வதி தன்னுடைய தோஷத்தை விலக்கிக் கொண்டாள்.

# Lingaraja Temple

## Santhipriya



Bhubaneswar, the state capital of Orissa has many temples built in ancient times, but unfortunately the history of many of them remain unknown, though the period in which they were built are known. One such temple is Lord Shiva Temple called Lingaraja Temple in Bhubaneswar. Brahma Purana proudly states that Bhubaneswar is the land of crores of Ling and called Ekamra Shethra. Ekamra refers to mango and the self manifested Shiva Ling was originally found under a Mango tree. Many temples are found

constructed on all sides of the lake called Bindu Sagar. Once You reach the lake side you can visit the temples of Vittala Devi, Ananda Vasudeva, Parasu Rama, Raja Rani and Lingaraja. The name ‘Lingaraja’ represents the King of Lingas and ‘Linga’ is another form of Lord Shiva. The temple is 54 meter in height, and laid out over 25 lakh square feet. Dedicated to Lord Shiva, this temple is estimated to have been constructed anywhere over 1100-1400 years. The granite rock which is representative of Lord Shiva, also known as Tribhuvaneshwara, meaning the Lord of three worlds.

According to some texts, the temple was constructed by Lalat Indu Keshari who ruled the region during 615 to 657 CE, but according to Brahma Purana, the Somavanshi King Yayati built the temple during the period 1025 to 1040 CE. However present day historians opine that the temple may have been constructed by Ananta Kesari and Udyota Kesari, sons of Yayati. In this temple which has been built with wonderful artifacts, the Shiva Ling enshrined inside is eight inches above the ground and eight feet in circumference (width) and self manifested one. Another peculiarity is that the Shiva ling is not called Lord Shiva but it is called as Hari-Hara Shiva ling which means Lord Shiva and Lord Vishnu. Therefore the Shiva Ling is worshipped both as Lord Shiva and Lord Vishnu. The temple is divided into three sections. Upon entering the temple, the first thing that catches one’s eye is the sanctum of Lord Ganesha and the next is the Divine Nandi shrine. The Pujas are performed twenty-two times a day. Mainly Vilva leaves and Thulsi leaves are used for performing pooja to the Shiva Ling. Once a year, an replica idol called procession deity of the Ling is taken to the Jala Mandir

in the middle of Sagar Lake. There are one hundred and fifty small shrines within the temple complex. The wall around the temple is built of red stone like a fort.

Although no historic evidences are available on the origin of the temple, folklore has a story of its own. There were two Devaganas, namely Keerthi and Vasa serving to Lord Shiva. But both had the evil eyes on the beauty of Goddess Parvathi and wanted to marry her. Since both the deva ganas were absolutely devoted to Lord Shiva, they had obtained a boon from the Lord that no one could kill them on earth. However they could be killed if they are forcefully drowned in a pious river equivalent to river Ganges that flow through Kasi. Therefore Lord Shiva worked out a plan to get them killed and while discussing something with his consort, he deliberately told Goddess Parvathi that the lake most liked by him next to Kasi was Ekamatha theerth. Goddess Parvathi quickly understood the inner meaning of the message and immediately expressed her desire to go and take bath in it. Since Lord Shiva expressed his inability to go with her due to some other work, Keerthi and Vasa came forward to accompany her. Agreeing to go with them, Goddess Parvathi sat on their shoulders as if she was traveling sitting in a palanquin and both Keerthi and Vasa too happily carried her with them.

When they reached the river Goddess Parvati told them that she was afraid of taking bath alone in that river and therefore, they should accompany her while taking bath. In the joy of getting such a call from Goddess Parvathi

they too dived into the river along with her with the evil intention of possessing her, but Goddess Parvati sitting on their shoulders forcibly drowned them into the water by pushing them with her legs and caused their death. Since Goddess Parvathi took bath in the river it got sanctified and became a pious river. The two Deva ganas who died inside the pious lake went to heaven. Goddess Parvathi too got herself relieved off from the sin of murdering them in the river.